a fashion for some people to ridicule the Hindu religious heads. So, will this Government give clear-cut instructions to all the police officers to take immediate action whenever religious sentiments of Hindus or Christians or Muslims or any other religionists are hurt?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்த மதத்தையும் அல்லது மதத் தலைவரையும், மதப் பிரசாரகரையும் புண்படுத்துகின்ற அளவிலே யாரும் நடந்துவிடக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. பெ. சீனிவாசன் : சார், மதவாதிகளுக்கு மதத்தைப் பற்றிய பிரசாரம் செய்ய எவ்வளவு உரிமையுண்டோ அந்த அளவுக்கு நாஸ்திகர்களுக்கு மதத்தை எதிர்த்துப் பேச உரிமையுண்டு என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. அந்த எல்லா உரிமைகளும் அளவோடு இருக்க வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், மதம் மக்களுக்கு அபின் என்று சொல்கிறார்களே. அப்படி சொல்கின்ற பகுத்தறிவு ஆட்சியாளர்கள் ஆளுகின்ற இந்த தேசத்திலே மீண்டும் மதத்தை வலியுறுத்தி பிரசாரம் செய்கின்ற நேரத்தில், மதம் மக்களுக்கு அபின் என்ற முறையில் அந்த மதப்பிரசாரங்களைத் தடை செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்த மதத்தையும் அல்லது மதப் பிரசாரத்தையும் தடை செய்கின்ற நோக்கம் இல்லை.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்னை சம்பந்தப்படுத்தி சொன்னதால் ஒரு விளக்கம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: கடைசியில் சொல்லுங்கள்.

Fire accident at New Kalpakkam

113 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether about seventy five huts and fishing implements were destroyed by fire in New Kalpakkam village in Chingleput district;

(*b*) the reason for the fire; and

(*c*) the extent of loss sustained by the fishermen?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.: (அ) செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த புதிய கல்பாக்கம் கிராமத்தில் 5—5—1968 தேதியன்று 69 குடிசைகள் மட்டுமே எரிந்து போனதாக அறிவிக்கப்பட்டது.

(இ) திரு. மேகநாத செட்டியார் என்பவரின் வீட்டில் அடுப்பை எவரும் கவனிக்காததால் தீப்பொறி பறந்து கூரையில் பற்றியதனால் இந்தத் தீ விபத்து எற்பட்டதென்று தெரிய வருகிறது.

1969 மார்ச் 1]

(உ) இந்தத் தீ விபத்தினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட விரயம் ஏறக்குறைய ரூ. 1,71,000 (ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்.—சார், அப்படித் தற்செயலாக எற்பட்ட இந்த தீ விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் கொடுத்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்கு எரிந்து போன குடிசைகளை கட்டிக்கொள்வதற்கும் துணிமணிகள் வாங்குவதற்குமாக ரூ. 5,490 நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 114, 115, 116 ஆகியவை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

குடுமியாமலை விவசாயப் பண்ணை.

* 117 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குடுமியாமலையில் அமைக்கப்பெற்ற விவசாயப் பண்ணைக்கு ஆன மொத்தச் செலவென்ன?

(இ) இப்பண்ணையின் சிறப்புக்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இந்த வேளாண்மைப் பண்ணைக்கு 30—6—1968 வரையில் ரூ. 2,90,832 செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,57,132 முதலீடு மூலதனமாகும்.

(இ) இந்தப் பண்ணையில் அடுத்தடுத்துள்ள 3,300 ஏக்கர் நிலம் உள்ளது. இது செம்மண் நிலம். இந்த நிலத்தைப் பயிரிடுவதற்கேற்றவாறு எளிதில் பண்படுத்த முடியும். இங்கு தண்ணீரும் குறைந்த ஆழத்திலேயே கிடைத்துவிடுகிறது. இப் பண்ணை, பொருளாதார அளவில், பின்தங்கிய பகுதியாகிய புதுக்கோட்டை கோட்டத்தில் அமைந்துள்ளது. டிராக்டர், விசையேற்றம் போன்ற யந்திர சாதனங்களைக் கொண்டு பயிரிடும் பண்ணையாக இது மேம்படுத்தப்பட்டு வருகிறது. உழவர்களுக்கு இது பரிசோதனை கட்புல விளக்கப் பண்ணையாகச் செயல்படவேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. அரசாங்கப் பண்ணை ஒன்றில் முதன் முறையாக இப்பண்ணையில் தான் நீர் தூவும் பாசன முறை (Sprinkler Irrigation system) செயலாக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பண்ணையிலே அதிகமாக ஈடுபட்டிருந்தார்கள். எனவே, இந்தப் பண்ணைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்ணை என்று பெயரிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் பண்ணையை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் தீவிர முயற்சி எடுத்து அந்தப் பண்ணை நல்ல முறையிலே இயங்குவதற்கு பாடுபட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அந்த பண்ணைக்கு அறிஞர் அண்ணா வேளாண்மைப் பண்ணை என்று பெயரிடப்பட வேண்டுமென்று திருச்சி வேளாண்மைக் கழகச் செயளாளரிடமிருந்து கோரிக்கை வந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அதை திருச்சி கலெக்டருக்கு சிபாரிசு செய்துள்ளார்கள். கலெக்டர் அதை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளார்கள். அரசாங்கம் பரிசீலித்து உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு அந்தப் பண்ணைக்கு அந்த பெயரிட முன்வரும்.